**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL**

| | | |
|---|---|---|
| Case No. | : | S.T.C NO.1/2024 |
| Deposition of witness | : | P.W.4 |
| List of witness | | L.W.4 |
| Name | : | பானுமதி |
| Father's /Husband Name | : | நடராஜன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 65 |
| Occupation | : | பால்வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 8th day May 2026.
Accused absent. Petition U/s 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து பால் வியாபாரம்செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். நாங்கள் பேருந்தில் ஒன்றாக பயணம் செய்த போது பார்த்துள்ளேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் பேருந்து ஓட்டுநர் ஆவார். கடந்த 2017 ஆம் வருடம் தேதி மாதம் நினைவில்லை. சுமார் மதியம் 03.00 மணியளவில் நான் கும்பகோணத்திலிருந்து நன்னிலம் செல்லும் அரசு பேருந்தில் சாமான்கள் ஏற்றிகொண்டு சென்று கொண்டிருந்தேன். அப்போது பேருந்தில் பிலாவடி பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நடத்துநர் விசில் அடித்து பேருந்தை நிறுத்தினார். அப்போது அ.சா.2 பேருந்திலிருந்து கீழே இறங்கும்போது கால் தடுக்கி கீழே விழுந்துவிட்டார். நான்தான் அவரை தூக்கினேன். எதிரிக்கும் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 21.02.2017 ம் தேதி அன்று சுமார் 03.00 மணியளவில் கும்பகோணம் நன்னிலம் வழியாக நாகப்பட்டிணம் செல்லும் TN 68 N 0806 என்ற பதிவெண் கொண்ட அரசு போக்குவரத்து கழக பேருந்தில் நான் சென்று கொண்டிருந்த போது மேலராமன்சேத்தி உள்ள சீதக்கமங்களம் பேருந்து

நிறுத்தத்தில்  நிறுத்தத்திற்காக நடத்துநர் விசில் அடித்தார் என்றும் பேருந்தினுடைய ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சென்றதால் மேற்படி பேருந்து நிலையத்தை தாண்டி திடீரென பிரேக் அடித்ததால் பேருந்தில் முன்னால் நின்றுகொண்டிருந்த அ.சா.2 நிலை தடுமாறி தரையில் கீழே விழுந்து விட்டார் என்றும் அதில் அவருக்கு இடது புற இடுப்பு பகுதியில் உள்காயமும் சிராய்ப்பு காயமும் ஏற்பபட்டது என்றும் பின்னர் அந்த நபரின் பெயர் பஞ்சவர்ணம் என்று தெரிந்துகொண்டேன் என்றும் பின்னர் காயம்பட்ட நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சம்பவத்தைநேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு  தற்சமயம் எனக்கே தெரிந்த காரணத்தினால் எதிரிக்கு ஆதரவாக உண்மை சங்கதிகளை மறைத்தும்  பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :- இல்லை.

**மறு விசாரணை** இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.08 11:02:09 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`